2017 ஜூலை 19] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மிக நீண்டக் காலமாக வழக்கத்தில் இருந்து வந்த அந்த வாய்மொழி குத்தகைப் பாட்ட விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்குப் பயிர்க் கடன் வழங்க வேண்டும். எனவே, உடனடியாக அந்த வாய்மொழி குத்தகைப் பாட்ட விவசாயிகளுக்குப் பயிர்க் கடன்களை வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

(ஆஉ) தாளவாடி மருத்துவமனை, பிரேத பரிசோதனைக் கூடம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. எஸ். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் தொகுதியில் எதிர்பாராமல் நேரிடும் விபத்துகளால் உயிரிழப்பு ஏற்படும்போது தாளவாடி மலைப் பகுதி அரசு மருத்துவமனையிலிருந்து சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக்குச் செல்ல 70 கிலோ மீட்டர் தூரமும், கர்நாடக மாநிலம் சாமராஜ் நகருக்குச் செல்ல 50 கிலோ மீட்டர் தூரமும் ஆகிறது. எனவே, தாளவாடி மலைப் பகுதி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக் கூடம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.*

(ஆஊ) திருமயம் தொகுதி, பேருந்துகளை மீண்டும் இயக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.*

திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொன்னமராவதியிலிருந்து செல்கின்ற அரசு பேருந்துகளான பொன்னமராவதி–செங்கோட்டை, பொன்னமராவதி–சிதம்பரம், பொன்னமராவதியிலிருந்து துவரங்குறிச்சி வழியாக திருச்சிக்குச் செல்கின்ற பேருந்து, பொன்னமராவதி–கோயம்புத்தூர், பொன்னமராவதியிலிருந்து காலை 7 மணிக்கும், இரவு 7–30 மணிக்கும் சென்னைக்கு செல்கின்ற பேருந்துகள் ஆகிய பேருந்துகள் தொடர்ந்து நிறுத்தப்பட்டு வருவதால்*

TRUTH ALONE TRIUMPHS